1981 பிப்ரவரி 6]

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் அவர்கள் குறிப்பிடும்போது வெளியிலே சிமெண்ட் விலை 50 ரூபாய்க்கு விற்கப்படுவதாகச் சொன்னார்கள். மாயூரத்தில் 60 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. எனவே, அந்த விலையைக் குறைக்க அரசு முன்வருமா?

(பதில் இல்லை.)

செங்கல்பட்டு மாவட்டத்தில் உப்பு உற்பத்தி.

*வினா எண் 220—திரு. கெ. சொக்கலிங்கம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு மாவட்டம், கேளம்பாக்கம், கோவளம் போன்ற இடங்களில் அதிகமாக உற்பத்தியாகும் உப்பை பயன்படுத்தும் வகையில் கேளம்பாக்கத்தில் சிறிய உப்பு (Table Salt) தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திரு நாவுக்கரசு : இல்லை.

ஆலங்குளம் தொகுதியில் மின்வெட்டு.

*வினா எண் 201—திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் ஆலங்குளம் தொகுதியில் இதர பகுதிகளைவிட மின்சாரவெட்டு மிக அதிகமாக உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதைப் போக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாணபுமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். என். இராமசாமி : துணைத் தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்தில் மின்சார வெட்டினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு, நஷ்டமடைகிறார்கள். அதைப்போல தொழிற்சாலைகளும் பாதிக்கப்படுகின்றன. அதைப்போக்க அரசு புதிய மின் உற்பத்தி நிலையங்களை அமைத்துத்தர உத்தேசித்து இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவை துரிதப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. அப்பாதுரை : தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்தில் குறிப்பாக ஆலங்குளம் பகுதியில் அதிகமான அளவு நீர்ப்பாசனக் கிணறுகள் மூலம் விவசாயம் நடப்பதால் அங்கே ட்ரான்ஸ்பார்மர் அமைப்பதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இது மின் வெட்டைப் பற்றிய கேள்வி. மின் வெட்டு என்பது தமிழகம் முழுவதும் அமலில் இருக்கின்றது. ஆலங்குளத்தில்தான் அதிகமான அளவு மின்வெட்டு என்பது இல்லை. ஆகவே, ட்ரான்ஸ்பார்மர் அமைப்பது குறித்து தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் மின்சாரத் தட்டுப்பாடு இருப்பதும் மின் வெட்டு அமுலாக்கப் பட்டிருப்பதும் பெரிய உண்மை. ஆனால், எந்த எந்தப் பகுதி களில் எந்தெந்த அளவுக்கு மின்வெட்டு இருக்கின்றது என்பதை அரசு அறிவித்தால் அந்தந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு சிரமம் இல்லாமல் இருக்கும். ஆகவே, அந்த முறையில் தெரிவிப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மின்வெட்டைப் பொறுத்தவரையில் உயர் அழுத்த மின்சாரத்தில் இயக்கப்பட்டு வருகின்ற இண்டஸ்ட்ரீஸுக்கு 30 சதவீதம் மின் வெட்டு உள்ளது. பம்ப் செட்டுகளைப் பொறுத்த வரையில் பகலில் 6 மணி நேரமும் இரவில் 8 மணி நேரமும் மின்சாரம் தரப்படுகின்றது. இதுதான் இப்போதுள்ள நிலைமை. இந்த நிலைமை மேம்பட மின் உற்பத்தியை அதிகரிக்கவும், மின் உற்பத் திக்கான திட்டங்களை விரைவுபடுத்தவும்தான் வேண்டும் என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

போடிநாயக்கன்பட்டி கிராமதிற்கு மின் இணைப்பு.

* வினா எண் 202—திரு. இ. கணேசன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இடைப்பாடி தொகுதி இடைப்பாடி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த போடிநாயக்கன்பட்டி கிராமத்திற்கு மின் இணைப்பு வழங்கும் திட்டம் ஒப்புதலாகி உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது நடவடிக்கை எடுப்பதில் தாமதத்திற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ) பணி முடிக்கப்பட்டு 1980 ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 12 ஆம் நாளன்று மின் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது.